# சமகால செல்நெறியில் இந்து ஆலய வழிபாட்டு மரபும் மாற்றமும் – வட்டுக்கோட்டைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**தீபன், பொ.,** ரமணராஜா, சி.

pontheepan94@gmail.com

குறித்த ஒரு இனக்குழுவானது காலங்காலமாகத் தன்னடையாளமாகப் பேணிவரும் விடயங்களும் பொருட்களும் "மரபு" எனும் வகைப்பாட்டினுள் உள்ளடங்குகின்றன. இலங்கையின் வடபிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணத்தின் ஒரு பிரதேசமே வட்டுக்கோட்டை. காலனித்துவ காலத்தில் வடபிராந்தியத்தில் அமைக்கப்பட்ட முதற் கல்லூரி (1823) இப்பிரதேசத்திலேயே அமைக்கப்பட்டு, கிறிஸ்தவ, ஆங்கில வாழ்க்கைமுறை பிரசாரப்படுத்தப்பட்டது. அரச உத்தியோகமும் புதிய மத்தியதரவர்க்க உருவாக்கமும் வெகுவாக பரவலாக்கமுற்றன. இங்கு தொன்மைக் காலந்தொட்டு நிலைபெற்றிருந்த சைவமும் தமிழும் தமிழர்தம் கலைமரபும் ஒடுக்கு முறைக்குள்ளாயின. பின்காலனிய காலமான இன்று அங்கு இருக்கின்ற சைவத்தின் ஆலயங்கள், வழிபாடுகள், கலைகள் என்பவற்றில் காணப்படுகின்ற மரபார்ந்த தன்மைகள் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றங்கள் என்பன இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. வட்டுக்கோட்டை பிராந்தியத்தின் பெயருருவாக்கம், சமூக, சமயப் பண்மைத்துவம், இங்கு காணப்படுகின்ற சைவாலயங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சைவாலயங்களானவை கிராமிய ஆலயங்கள், மேனிலையாக்கம் பெற்ற ஆகமக் கோயில்கள், இருமரபும் ஒருங்கே துய்க்கப்பெற்ற ஆலயங்கள் என மூவகைத்தன்மை உடையவையாகக் காணப்படுகின்றன. கிராமியக் கோயில்கள் தவிர்ந்த இருமரபுக் கோயில்களும் கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளை உடையனவாகவும் திகழ்கின்றன. கூத்துக்கள் நடைபெற்றுள்ளன. இக்கலை மரபுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த ஆய்வு முதன்மைப்படுத்தி கவனத்திற் கொள்கின்றது. இக்கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு மரபுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், மரபார்ந்த தன்மைகளையும் பிரித்தறிந்து அவற்றுக்கான பின்னனியை ஆய்வுக்குட்படுத்துகிறது. வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் உள்ள ஆலய வழிபாட்டு மரபுகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றனவா? என்பது இங்கு ஆய்வுப்பிரச்சனையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. வட்டுக்கோட்டை பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆலய அமைப்புகள், கலைகள், வழிபாடுகள், பாரம்பரியமாக பேணப்பட்டு வந்தமரபுகள் முதலானவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், அம்மாற்றங்கள் எவற்றால் நிகழப்பெற்றன என்பவற்றை இனங்கண்டு அதன் விளைவுகளை வெளிக்கொணர்வதே ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்வின் எல்லையாக வட்டுக்கோட்டைக் கிராம அலுவலர் பிரிவுகளான வட்டு கிழக்கு - J/157, வட்டு வடக்கு - J/158, சங்கரத்தை - J/159, வட்டு தெற்கு J/165, வட்டு தென்மேற்கு - J/166, வட்டு மேற்கு - J/167 ஆகிய பிரிவுகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சமூக மேனிலையாக்கம் மற்றும் பின்காலனியச் சூழல் இன்றைய சமயவியயலில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களை கவனத்திற் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள் அங்கு நடைபெறும் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை அறிய இவ்வாய்வு துணைபுரியும்.

**திறவுச்சொற்கள் :** சைவாலயங்கள், மரபு, மாற்றம், வழிபாடு, கலை